தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 17

## பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு

(பிறந்த திகதி: 01.07.2014 - 30.06.2016).

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

# தன்னம்பிக்கை

சாதனை படைத்தவர்களின் பாதையை நாம் பின்பற்றினால் எமக்கும் வெற்றி நிச்சயம் என்று நம்மிற் பலர் நம்புகிறோம். சாதனையாளர்கள் ‘அயராது உழைத்தல்’, ‘பரந்த எண்ணம்’, ‘மன உறுதி’ போன்ற பல விடயங்களை உறுதியாகக் கடைப்பிடிப்பார்கள். இவை எல்லாம் வெற்றிக்கு வழி வகுப்பவைதான். ஆனாலும், எப்பொழுது ஒருவரின் தன்னம்பிக்கை தளர்ந்து விடுகின்றதோ அதன் பின்னர் அவர் தனது குறிக்கோளில் வெற்றி பெற முடியாது!

மனதில் உறுதி இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால் நாம் தடுமாறும் போதெல்லாம் எம்மைத் தூக்கி நிறுத்துவது தன்னம்பிக்கைதான் என்பதை மறந்துவிடக் கூடாது.

தோல்வியைச் சந்திக்காத மனிதர் என்று எவரும் இல்லை. ஆகையால் தோல்விகளைக் கண்டு மனம் தளர்ந்து விடக்கூடாது! பரீட்சையில் நாம் நினைத்த புள்ளிகளைப் பெறாவிட்டால் என்ன? ‘அடுத்த முறை நடக்கும் பரீட்சையில் அப்புள்ளிகளைப் பெறுவேன்’ என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த எண்ணமே வெற்றிக்கான முதற்படி. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அன்றோ?

நன்றி, வணக்கம்.